## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 21, 2017

**1. எந்த நாடு, ஊடகம் மற்றும் பொழுதுபோக்கின் வியாபாரம் குறித்த ஆசியாவின் மிகப்பெரிய மாநாடான "FICCI Frames-2017"-ன் 18-வது பதிப்பை நடத்துகிறது ?**

A. இந்தியா
B. சிங்கப்பூர்
C. ஜப்பான்
D. சீனா

**விடை: A. இந்தியா**

ஊடகம் மற்றும் பொழுதுபோக்கின் வியாபாரம் குறித்த ஆசியாவின் மிகப்பெரிய மாநாடான "FICCI Frames-2017"-ன் 18-வது பதிப்பு மஹாராஷ்டிரா மாநிலத்தின் மும்பையில் மார்ச் 21 முதல் தொடங்கியது. 3 நாள் சர்வதேச மாநாடு திரைப்படங்கள், ஒலிபரப்பு (டிவி மற்றும் வானொலி), டிஜிட்டல் பொழுதுபோக்கு, அனிமேஷன், கேமிங், விசுவல் எபெக்ட்ஸ் போன்ற மீடியா & பொழுதுபோக்கின் முழு ஸ்பெக்ட்ரமையும் உள்ளடக்கியுள்ளது. கிட்டத்தட்ட ஊடக மற்றும் பொழுதுபோக்கு உலகை சுற்றியுள்ள 2000 இந்திய மற்றும் 800 வெளிநாட்டு பிரதிநிதிகள் நிகழ்வில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு மாநாட்டின் கருப்பொருள் "Digital-Divide or Dividend". கனடா, இந்த ஆண்டு முதல் முறையாக நிகழ்வில் பங்குதாரராக உள்ளது.

**2. எந்த இந்திய வங்கி, கிராமப்புற வாடிக்கையாளர்களுக்காக "Mera iMobile" எனும் மொபைல் பயன்பாட்டை தொடங்கியுள்ளது ?**

A. எச்டிஎப்சி வங்கி
B. ஐசிஐசிஐ வங்கி
C. ஆக்சிஸ் வங்கி
D. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா

**விடை: B. ஐசிஐசிஐ வங்கி**

கிராமப்புற வாடிக்கையாளர்களுக்காக "Mera iMobile" எனும் மொபைல் பயன்பாட்டை ஐசிஐசிஐ வங்கி தொடங்கியுள்ளது, இப்பயன்பாடு வங்கி சேவைகளையும் அத்துடன் விவசாய சேவைகள் குறித்த தகவலையும் அணுக அனுமதிக்கிறது. இந்த பயன்பாடு வங்கி வாடிக்கையாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொதுவானது மற்றும் 11 வெவ்வேறு மொழிகளில் கிடைக்கிறது. வங்கி சேவைகளின் பட்டியலில் கிசான் கிரெடிட் கார்டு, தங்கம் கடன், பண்ணை உபகரணங்கள் கடன் மற்றும் சுய உதவி குழுக்கள் (SHGs) கடன் ஆகியவை அடங்கும். இந்த பயன்பாடானது, மொபைல் இணைய சேவைகளைப் பயன்படுத்தாமல் தங்கள் ஸ்மார்ட்போனில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிற பல்வேறு வங்கிச் சேவைகளை மேற்கொள்ள அனுமதிக்கிறது. கூடுதலாக, 400 மண்டிகளில் கிட்டத்தட்ட 230 வகை பயிர்களின் விலைப்பட்டியலுடன் மண்டி வாரியாக விவசாயம் தொடர்புடைய தகவல்களை வழங்கும் முதல் வங்கிப் பயன்பாடு இதுவாகும். விவசாயிகள், தங்கள் விதைத்தல் மற்றும் சாகுபடி நடவடிக்கைகளை திட்டமிட வசதியாக, அவர்களுக்கு தகவல் அளிக்கும் வகையில் சுமார் 300 மாவட்டங்களில் உள்ள 3700 வட்டங்களில் தாலுக்கா வாரியாக வானிலை பற்றிய விவரங்களை உடனுக்குடன் பயன்பாடு புதுப்பித்து காட்டுகிறது.

**3. எந்த இந்திய வீராங்கனை, 2017 ஈடன் உலக பெண்கள் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பில் வெள்ளி வென்றுள்ளார் ?**

A. உமாதேவி நாகராஜ்
B. அரண்ட்சா சன்சிஸ்
C. சித்ரா மகிமைராஜ்
D. வித்யா பிள்ளை

**விடை: D. வித்யா பிள்ளை**

சிங்கப்பூரின் சப்ரா டோ பயொஹ்கில் நடைபெற்ற 2017 ஈடன் உலக பெண்கள் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவை சேர்ந்த வித்யா பிள்ளை வெள்ளி வென்றார். இந்த அருஞ்செயல் மூலம், 2017-ல் இந்தியாவின் முதல் சர்வதேச பதக்கத்தை வித்யா வென்றார். ஹாங்காங்கை சேர்ந்த என்ஜி ஆன் யீ (Ng On Yee) இந்த சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றார்.

**4. எந்த இந்திய-அமெரிக்க ஆளுமை, தேசிய அறிவியல் அறக்கட்டளையின்(NSF) கேரியர் அவார்ட்-2017 யை வென்றுள்ளார் ?**

A. அன்சுமலி ஸ்ரீவத்சவா
B. வி கே ஆட்ரே
C. சிவதாணு பிள்ளை
D. நேகா சர்மா

**விடை: A. அன்சுமலி ஸ்ரீவத்சவா**

இந்திய-அமெரிக்க கணினி விஞ்ஞானி அன்சுமலி ஸ்ரீவத்சவா, தற்போதைய இயந்திர கற்றல் நிகழ்முறைகளை மறுவடிவமைக்கும் அவரது ஆராய்ச்சிக்காக தேசிய அறிவியல் அறக்கட்டளையின்(NSF) மதிப்புமிக்க 2017 கேரியர் விருதை வென்றுள்ளார். டெக்சாஷின் ஹூஸ்டனில் அமைந்துள்ள தனியார் ஆராய்ச்சி பல்கலைக்கழகமான, பொதுவாக RICE பல்கலைக்கழகம் அல்லது RICE என அழைக்கப்படும் வில்லியம் மார்ஷ் ரைஸ் பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறையில் உதவிப் பேராசியராக தற்போது பணியாற்றி வருகிறார்.

**5. சமீபத்தில் மறைந்த சின்னு மோடி (Chinu Modi), எந்த மொழியின் குறிப்பிடத்தக்க கவிஞர் ஆவார் ?**

A. தமிழ்
B. குஜராத்தி
C. ஒடியா
D. உருது

**விடை: B. குஜராத்தி**

குறிப்பிடத்தக்க குஜராத்தி கவிஞரும் கஜல் எழுத்தாளருமான சின்னு மோடி (78), சமீபத்தில் குஜராத்தின் அகமதாபாத்தில் காலமானார். இவர் தனது கவிதை, நாடகங்கள், நாவல்கள் கதைகள் மூலமாக குஜராத்தி இலக்கியத்திற்கு மிகப்பெரும் பங்களிப்பு செய்துள்ளார். கவிதை, நாடகம், நாவல், கதைகள், விமர்சனங்கள், சுயசரிதை, தொகுப்பு, இசை மற்றும் மொழிபெயர்ப்பு என தோராயமாக 50 புத்தகங்கள் இவரால் எழுதப்பட்டுள்ளது.

1975- 1977 காலகட்டத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் (ISRO) ஸ்கிரிப்ட் எழுத்தாளராக பணியாற்றினார். அவரது கடைசி ஆசைப்படி, அவரது உடல் மருத்துவக் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கப்படும்.

### 6. 2017 ஏடிபி இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்றுள்ளவர் யார் ?

A. நோவக் ஜோகோவிக்
B. ஸ்டான் வாவ்ரிங்கா
C. ரோஜர் பெடரர்
D. ஆண்டி முர்ரே

**விடை: C. ரோஜர் பெடரர்**

ரோஜர் பெடரர், இறுதி ஆட்டத்தில் 6-4, 7-5 என்ற புள்ளிகளில் ஸ்டான் வாவ்ரிங்காவை தோற்கடித்து 2017 ஏடிபி இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்றுள்ளார். இந்த வெற்றியின் மூலம், ஐந்து இந்திய வெல்ஸ் பட்டங்களை வென்ற ஒரே மனிதராக ஜோகோவிக்குடன் பெடரர் சேர்ந்தார். முன்னதாக, இவர் இந்த தலைப்பை 2004 மற்றும் 2006 க்கு இடையில் தொடர்ந்து 3 முறையும், 2012 ஆம் ஆண்டும் வென்றுள்ளார். 35 வயதாகும் பெடரர், உயரடுக்கு மாஸ்டர் பட்டங்களை வெல்லும் பழமையான ஏடிபி வீரர் ஆவார், இதற்கு முன் இப்பெருமையை கொண்டிருந்த ஆண்ட்ரே அகாசி 2004-இல் சின்சினாட்டியில் வெற்றி பெற்ற போது அவருக்கு வயது 34.

### 7. 2017 சர்வதேச காடுகள் தினத்தின் மையக்கரு என்ன ?

A. Forests and Energy
B. Forests and Greenry
C. Forests and Life
D. Forests and Animals

**விடை: A. Forests and Energy**

தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறையினரின் நலனுக்காக அனைத்து வகையான காடுகள் மற்றும் வெளியிடங்களில் உள்ள மரங்களின்

முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வுஏற்படுத்த, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21 ம் தேதி சர்வதேச காடுகள் தினம் அனுசரிக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டிற்கான மையக்கரு 'Forests and Energy'. மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துதல், நிலையான வளர்ச்சியை அளித்தல் மற்றும் காலநிலை மாற்றத்தை குறைத்தல் ஆகியவற்றில் மர ஆற்றலின் முக்கியத்துவத்தை இவ்வாண்டின் மையக்கரு உயர்த்திக் காட்டுகிறது.

**8. எந்த கிரிக்கெட் அணி, 2017 விஜய் ஹசாரே டிராபியை வென்றுள்ளது ?**

A. கர்நாடகம்
B. குஜராத்
C. ஜார்கண்ட்
D. தமிழ்நாடு

**விடை: D. தமிழ்நாடு**

தமிழ்நாடு கிரிக்கெட் அணி, தில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 37 ரன்கள் வித்தியாசத்தில் வங்காளத்தை தோற்கடித்து விஜய் ஹசாரே டிராபியின் 15-வது சீசனில் வெற்றி பெற்றுள்ளது. தினேஷ் கார்த்திக் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். 5-வது முறையாக இந்த கோப்பையை தமிழ்நாடு கிரிக்கெட் அணி வெல்கிறது.

**9. 2017 உலக மகிழ்ச்சி குறியீட்டில் (WHI) இந்தியாவின் தரம் என்ன ?**

A. 118 வது
B. 122 வது
C. 144 வது
D. 153 வது

**விடை: B. 122 வது**

சமீபத்தில் வெளியிடப்பட்ட உலக மகிழ்ச்சி அறிக்கை (WHR) 2017-ன் படி, ஐக்கிய நாடுகளின் உலக மகிழ்ச்சி குறியீட்டில் இந்தியாவானது 155 நாடுகளில் 122-வது இடத்தை பிடித்துள்ளது. 8 சார்க் நாடுகளில் பாகிஸ்தான்

80-வது இடத்திலும், நேபாளம் 99-வது இடத்திலும், பூடான் 97-வது இடத்திலும், வங்க தேசம் 110-வது இடத்திலும், இலங்கை 120-வது இடத்திலும் உள்ளன. பட்டியலில் டென்மார்க் முதலிடத்திலும், அதனை தொடர்ந்து டென்மார்க், ஐஸ்லாந்து, சுவிச்சர்லாந்து மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளும் உள்ளன. தரவரிசையானது, ஒரு நபருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), உலக ஆய்வுகளிடம் இருந்து பெறப்பட்ட நான்கு காரணிகளைக் கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கை எதிர்பார்ப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டவை. இந்த ஆய்வில் மக்கள், ஏதாவது தவறு நடந்தால் அவர்கள் எவ்வளவு சமூக ஆதரவை உணர்கிறார்கள், தங்களுக்கு விருப்பமான வாழ்க்கை முறையில் வாழ கிடைக்கும் சுதந்திரம், தங்கள் சமூகம் எவ்வளவு ஊழல் நிறைந்தது மற்றும் அவர்கள் எவ்வளவு தாராளமானவர்கள் என்பதை பொறுத்து 1 முதல் 10 மதிப்பெண்கள் வழங்குவர்.

**10. எந்த நாடு, 2017 ப்ளூம்பெர்க் உலகளாவிய சுகாதார குறியீட்டில்(Bloomberg Global Health Index) முதலிடம் வகிக்கிறது ?**

A. சுவிச்சர்லாந்து
B. இத்தாலி
C. ஆஸ்திரேலியா
D. சிங்கப்பூர்

**விடை: B. இத்தாலி**

சமீபத்திய 2017 ப்ளூம்பெர்க் உலகளாவிய சுகாதார குறியீட்டின்படி, 163 நாடுகளில் இத்தாலி முதலிடம் வகிக்கிறது. ஆய்வின்படி, அந்நாட்டில் சராசரி வாழ்நாள் 80-89 ஆண்டுகள் ஆகும். ஐஸ்லாந்து 2-வது இடத்திலுள்ளது, அதனை தொடர்ந்து சுவிச்சர்லாந்து, சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியா உள்ளன. குறியீட்டில் உள்ள ஒவ்வொரு நாடும் வாழ்நாள் எதிர்பார்ப்பு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் புகையிலைப் பயன்பாடு முதல் ஊட்டச்சத்தின்மை மற்றும் சுத்தமான நீர் கிடைப்பது வரையிலான மரணம் மற்றும் சுகாதார அபாய காரணங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.